# நவி மும்பை தமிழ்ச் சங்கம்
# NAVI MUMBAI TAMIL SANGAM

(Regd.No. MAH-840 Thane & F-777 Thane)
Plot No. 2/C-1, Sector 9A, Vashi, Navi Mumbai - 400 703.
E-mail : nmtamilsangam@yahoo.in • Mob.: 88500 48203

## *நவி மும்பை தமிழ்ச் சங்கத்தின் 46வது ஆண்டு பொதுக்குழுக் கூட்ட வரைவு அறிக்கை.*

*பெருமதிப்பிற்குரிய அங்கத்தினர்களுக்கு, வணக்கம்.*

*நவி மும்பை தமிழ்ச் சங்கத்தின் 46வது ஆண்டு பொதுக்குழுக் கூட்டம் 3-12-23 ஞாயிற்றுக்கிழமை காலை 10.30 மணிக்குத் தமிழ்ச் சங்க வளாகத்தில் (செக்டர் 9 ஏ, வாஷி) கூடியது. குறைந்த பட்ச உறுப்பினர்கள் இருக்காததால் சங்க விதிமுறைப்படி 30 நிமிடங்கள் ஒத்தி வைக்கப்பட்டது.. பின்னர், காலை 11 மணிக்கு 94 உறுப்பினர்களுடன் கூட்டம் தொடங்கியது.*

*2022-23ஆம் ஆண்டுக்கான பொதுக்குழுக் கூட்டம் என்பதால், செயலாளர், அந்த நிதியாண்டில் அறங்காவலர் குழுத் தலைவராக இருந்த திரு. விஆர்.பி. கிருஷ்ணமூர்த்தி (ஆ.உ.எ.452) அவர்கள், தற்போதைய அறங்காவலர் குழுத்தலைவர் திரு. எஸ். ஏகாம்பரம் (ஆ.உ.எ. 338), அவர்கள் அறங்காவலர் குழு நிர்வாகி திரு. சிதம்பரதாணு, அவர்கள் (ஆ.உ.எ.420), நிர்வாகக்குழுத் தலைவர் திருமதி ராஜஸ்ரீ நாகராஜன் (ஆ.உ.எ.403) ஆகியோரை மேடைக்கு வருமாறு அழைத்தார். பின்னர் திருமதி மீனாட்சி வெங்கடேஷ் (ஆ.உ.எ.475) அவர்கள் சங்கத்தின் மூத்த உறுப்பினரும் மகாராஷ்டிராவின் தொழில் சங்க இயக்கங்களுக்குப் பெரும்பங்களிப்பு வழங்கி வருபவருமான திரு. பி. கோதண்டராமன் (ஆ.உ.எ.678) அவர்களை நவிமும்பை தமிழ்ச் சங்கத்தின் 46வது பொதுக்குழுக் கூட்டத்திற்குத் தலைமை தாங்கி நடத்தித்தருமாறு தாழ்மையுடன் வேண்டி முன்மொழிவு செய்தார். இதனைத் திருமதி பேபிராணி அவர்கள் (ஆ.உஎ. 558) வழிமொழிந்தார். இதனைத்தொடர்ந்து திரு.எஸ்.கோதண்டராமன் அவர்கள் தனது முன்மொழிவுக்கு நன்றி தெரிவித்து கூட்டம் நன்கு நடைபெற அனைத்து உறுப்பினர்களின் ஒத்துழைப்பையும் வேண்டினார். இதனைத் தொடர்ந்து கடவுள் வாழ்த்து, தமிழ்த்தாய் வாழ்த்து மற்றும் மராத்தியத் தாய் வாழ்த்து இசைக்கப்பட்டது. பின்னர் அவைத்தலைவர் அனுமதியுடன் கீழ்க்காணும் நிகழ்ச்சி நிரல் குறிப்புகள் செயல்படுத்தப்பட்டன.*

***குறிப்பு எண் 1 :- செயலாளர் வரவேற்புரை**: சங்கத்தின் புனரமைப்புக்குப் பிறகு நடை பெறும் முதல் பொதுக்குழுக் கூட்டத்திற்கு வருகை தந்திருந்த அனைத்து உறுப்பினர்களையும், புதிதாக உறுப்பினர் அங்கீகாரம் பெற இருந்த நபர்களையும் அறங்காவலர் குழு மற்றும் நிர்வாகக்குழுவின் சார்பாகச் செயலாளர் வரவேற்றார்.. பின்னர் அவர், சங்கத்தின் இரண்டாம் தளத்திற்குக் குளிரூட்டி வசதி செய்யப்பட்டு விட்டதையும் மின்தூக்கி பொருத்துவதற்கு ஏற்பாடுகள் நடைபெறுவதையும் தெரிவித்தர். பின்னர், புனரமைப்புத் திறப்புவிழாவுக்குப் பின் சங்கத்தில் நடைபெற்ற நிகழ்ச்சிகள் பற்றியும் உறுப்பினர்களுக்குத் தெரிவித்தார்.*

***குறிப்பு எண் 2 . மறைந்த சங்க அங்கத்தினர்களுக்கு இரங்கல் தெரிவித்து மௌன அஞ்சலி செலுத்துதல்**:-இறைவனடி சேர்ந்த .சங்க உறுப்பினர்களான திரு.எம்.தாமோதரன் அவர்கள் (ஆ..உ.எ.113), சங்கத்தின் முன்னாள் அறங்காவலராகச் சேவை செய்த திரு. பி.ஏ. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் (ஆ.உ.எ. 257) திரு. ராஜா அவர்கள் (ஆ.உ.எ. 287),திரு.என்.சுவாமிநாதன் அவர்கள் (ஆ.உ.எ. 655) சங்கத்தின் தமிழ் ஆசிரியையாக 30 ஆண்டுகளுக்கும் மேலாகத் தொண்டாற்றிய திருமதி ஜெய காமாட்சி, அவர்கள் (ஆ.உ.எ. 467), சங்கத்தின் நிர்வாகக் குழுவின் துணைச்செயலாளராக இருந்து அரிய பங்களிப்பு வழங்கிய திரு. ஜி. பைரவ சுப்ரமணியம் அவர்கள் (ஆ.உ.எ. 787 )சங்கத்தின் அறங்காவலராகவும் அறங்காவலர் குழு நிர்வாகக் குழுவிலும் பல்வேறு பொறுப்புகளை வகித்தவரும் நம் சங்கத்திற்கு தமிழ்த்தாய் விருது முதல் பல்வேறு விருதுகளைப் பெற்றுத் தந்தவருமான திரு. என். மகாதேவன் அவர்கள் (ஆ.உ.எ.276), ஆண்டுதோறும் சங்க நிகழ்வுகளுக்கு உதவி செய்து வந்த திரு. ஆர். கிருஷ்ணன் அவர்கள் (ஆ.உ.எ.544) ஆகியோரது மறைவுக்கு அங்கத்தினர்கள் இரங்கல் தெரிவித்து இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்தினார்கள்.*

***குறிப்பு எண் 3. நிர்வாகக் குழுக் கூட்டத்தில் பரிசீலனை செய்யப்பட்டு பரிந்துரைக்கப்பட்ட நபர்களின் விண்ணப்பங்களை ஏற்று அவர்களை நவிமும்பை தமிழ்ச்சங்கத்தில் ஆயுட்கால உறுப்பினர்களாகச் சேர்ப்பதற்கு பொதுக்குழுவின் ஒப்புதல் பெறுதல்.***

*27-11-22 நடந்த பொதுக்குழுக் கூட்டத்திற்குப் பிறகு 3-12-23 பொதுக்குழுக் கூட்டம் வரையிலான ஒன்றரை ஆண்டு காலகட்டத்தில் 43 நபர்கள் சங்கத்தில் உறுப்பினர்களாக விண்ணப்பித்திருந்தாகவும் அவர்கள் விண்ணப்பங்கள் நிர்வாகக்குழுக் கூட்டங்களில் பரிசீலிக்கப்பட்டுப் பொதுக்குழுவின் ஒப்புதலுக்காகப் பரிந்துரை செய்யப்பட்டுள்ளதாகச் செயலாளர் தெரிவித்தார். பரிந்துரை செய்யப்பட்ட நபர்களது பெயர்கள் படிக்கப்பட்டு அவர்கள் சங்கத்தின் ஆயுட்கால உறுப்பினர்களாவதற்குப் பொதுக்குழு ஒரு மனதாக அங்கீகாரம் வழங்கியது. இந்த உறுப்பினர் சேர்க்கைக்குப் பிறகு சங்கத்தின் அங்கத்தினர் எண்ணிக்கை 898 ஆகும் என்று செயலாளர் தெரிவித்தார். புதிய உறுப்பினர்களது பெயர்ப்பட்டியல் இந்த வரைவுக் குறிப்பின் இறுதியில் வழங்கப்பட்டுள்ளது.*

***தீர்மானம் 1.(2022-23) நிர்வாகக் குழுவால் பரிந்துரைக்கப்பட்ட 43 நபர்களை சங்கத்தின் ஆயுட்கால உறுப்பினர்களாகப் பொதுக்குழு ஒருமனதாக அங்கீகரித்து அந்த ஒப்புதலுக்கான தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.***

*முன்மொழிந்தவர் திரு. எல். மணிவாசகம் (ஆ.உ.எ. 18)*

*வழி மொழிந்தவர் திரு. எஸ். சுந்தரராஜன் (ஆ.உ.எ. 422)*

இதனையடுத்து சங்கத்தின் துணைச் செயலாளர் திரு. எஸ். ராமையா புதிய உறுப்பினர்களின் பெயர்களை அறிவித்து அவர்களை வரவேற்றார். அவர்கள் ஒவ்வொருவருக்கும் கௌரவிப்பு செய்யப்பட்டது. புதிய உறுப்பினர்களின் பெயர்ப் பட்டியல் இந்த வரைவுக் குறிப்பின் இறுதிப் பகுதியில் வழங்கப்பட்டுள்ளது.

*இதற்குப் பிறகு சங்கத்தின் கட்டட விரிவாக்கக் குழு, வலைத்தளக் குழு மற்றும் சங்க விதிமுறைகள் திருத்தக் குழு ஆகிய குழுவினரின் தலைசிறந்த பங்களிப்புக்கு நன்றி தெரிவிக்கப்பட்டது. இந்தக் குழுக்களின் உறுப்பினர்களில் சிலர் பொதுக்குழுக் கூட்டத்திற்கு வந்திருந்தார்கள். அவ்வாறு வந்திருந்த உறுப்பினர்களுக்குப் பயனாடை போர்த்திக் கௌரவிப்பு செய்யப்பட்டது. கட்டட விரிவாக்கத்திற்கு உறுதுணையாக இருந்து பல்வேறு கட்டணச் சலுகைகளை வாங்கித்தந்த விரிவாக்கக் குழு உறுப்பினர் திரு. எஸ். சுந்தரராஜன் (ஆ.உ.எ.422), அவர்கள் முன்னாள் அறங்காவலர் குழுத்தலைவரும், தமிழ்நாடு அரசிடமிருந்து மிகப்பெரிய தொகையை நவி மும்பை தமிழ்ச் சங்கத்திற்கு கட்டட நிதியாகப் பெற்றுத் தந்தவருமான திரு. வி.ஆர்.பி. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் (ஆ.உ.எ.454) சங்கத்தின் வலைத்தளக் குழுத் தலைவரும் சங்கத்தின் யூடியுப் சானல் மூலம் கரோனா காலத்தில் அனைத்து நிகழ்வுகளையும். வழங்கியும் சங்கத்தின் பொதுக்குழுக் கூட்டத்தை ஆன்லைன் மூலம் நடத்தி உதவியும் அரிய பங்களிப்பு வழங்கிய திரு. கணேஷ் சுப்ரமணியன் அவர்கள் (ஆ.உ.எ. 439) ஆகியோர் கௌரவிக்கப்பட்டார்கள்.*

***குறிப்பு எண் 4. 27-11-22 அன்று நடந்த பொதுக்குழுக் கூட்டத்தின் குறிப்புகளுக்கு ஒப்புதல் பெறுதல்.***

*27-11-22 அன்று நடைபெற்ற பொதுக்குழுக் கூட்டத்தின் வரைவுக் குறிப்பு, ஆண்டறிக்கையுடன் அனைத்து உறுப்பினர்களுக்கும் அனுப்பப்பட்டது எனவும் இந்த வரைவுக் குறிப்பு தொடர்பாக உறுப்பினர்கள் பின்னூட்டம் எதுவும் அளிக்கவில்லை எனவும் செயலாளர் தெரிவித்தார். உறுப்பினர்கள் ஒப்புதல் அளித்தால் இந்த வரைவுக் குறிப்புக்கு அவையால் ஏற்கப்படும் என்று அவர் கூறினார். அவையினர் 27-11-22 அன்று நடந்த பொதுக்குழுக் கூட்டத்தின் வரைவுக் குறிப்புக்கு ஒப்புதல் தெரிவித்தார்கள்.*

***தீர்மானம் 2 (2022-23) 27-11-22 அன்று நடந்த பொதுக்குழுக் கூட்டத்தின் வரைவுக் குறிப்புக்கு ஒருமனதாக ஒப்புதல் வழங்கப்பட்டது. அந்த ஒப்புதலுக்கான தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.***

*முன்மொழிந்தவர் திரு. எம். ராஜகோபால் (ஆ.உ.எ. 19)*

*வழிமொழிந்தவர் திரு. பி. பாலசுப்ரமணியன் (ஆ.உ.எ. 320)*

**குறிப்பு எண் 5 26-3-23 அன்று நடைபெற்ற சிறப்புப் பொதுக்குழுக் கூட்டக் குறிப்புகளுக்கு ஒப்புதல் பெறுதல்**

*26-3-23 அன்று நடைபெற்ற சிறப்புப் பொதுக்குழுக் கூட்டத்தின் வரைவுக் குறிப்பு, ஆண்டறிக்கையுடன் அனைத்து உறுப்பினர்களுக்கும் அனுப்பப்பட்டது எனவும் இந்த வரைவுக் குறிப்பு தொடர்பாக உறுப்பினர்கள் பின்னூட்டம் எதுவும் அளிக்கவில்லை எனவும் செயலாளர் தெரிவித்தார். உறுப்பினர்கள் ஒப்புதல் அளித்தால் இந்த வரைவுக் குறிப்புக்கு அவையால் ஏற்கப்படும் என்று அவர் கூறினார். அவையினர்5 26-3-23 அன்று நடைபெற்ற சிறப்புப் பொதுக்குழுக் கூட்ட குறிப்புகளுக்கு ஒப்புதல் வழங்கினார்கள்..*

***தீர்மானம் 3 (2022-23) 26-3-23 அன்று நடந்த சிறப்புப் பொதுக்குழுக் கூட்டத்தின் வரைவுக் குறிப்புக்கு ஒருமனதாக ஒப்புதல் வழங்கப்பட்டது. அந்த ஒப்புதலுக்கான தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.***

*முன்மொழிந்தவர் : திருமதி சாவித்திரி ரவிசங்கர் (ஆ.உ.எ. 312)*

*வழிமொழிந்தவர்: திரு எல். மணிவாசகம் (ஆ.உ.எ. 18)*

**குறிப்பு எண் 6. 27-8-23 அன்று நடைபெற்ற சிறப்புப் பொதுக்குழுக் கூட்டக் குறிப்புகளுக்கு ஒப்புதல் பெறுதல்.**

*27-8-23 அன்று சங்கத்தின் அறங்காவலர் குழு மற்றும் நிர்வாகக் குழுவுக்கான தேர்தல்கள் நடைபெற்றன எனவும், தேர்தல் ஆணையர் 27-8-23 அன்று இரவு நடைபெற்ற சிறப்புப் பொதுக்குழுக் கூட்டத்தில் தேர்தல் முடிவுகளை அறிவித்து சிறப்புப் பொதுக்குழு கூட்டத்தில் தேர்தல் முடிவுகளுக்கு ஒப்புதல் பெற்றார் எனவும் செயலாளர் தெரிவித்தார்.*

*நடந்து முடிந்த தேர்தலில் அறங்காவலர் குழுத் தலைவராக திரு. எஸ். ஏகாம்பரம் அவர்கள் (ஆ.உ.எ.338), அறங்காவலர் குழு நிர்வாகியாக திரு. ஏ. சிதம்பரதாணு அவர்கள் ஆ.உ.எ. 420), அறங்காவலர் குழுப் பொருளாளராக திரு. வி. சுரேஷ்குமார், அவர்கள் (ஆ.உ.எ.777) அறங்காவலர்களாக திரு. எஸ். குமரேசன் அவர்கள் (ஆ.உ.எ.254), திரு. எம். முருகேசன் அவர்கள் (ஆ.உ.எ.744) ஆகியோர் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள் என்று செயலாளர் தெரிவித்தார். அத்துடன் நிர்வாகக் குழுவின் தலைவராக திருமதி ராஜஸ்ரீ நாகராஜன் அவர்கள் (ஆ.உ.எ.403), துணைத் தலைவராக திரு. என். நாராயணன் (ஆ.உ.527), அவர்கள் செயலாளராகத் திருமதி மீனாட்சி வெங்கடேஷ் (அ.உ.எ.475) அவர்கள், துணைச் செயலாளராகத் திரு. எஸ். ராமையா அவர்கள் (ஆ.உ.எ.736), பொருளாளராகத் திரு. ஆர். பெருமாள், அவர்கள் (ஆ.உ.எ.495) உதவிப் பொருளாளராகத் திரு. எஸ். முத்துகிருஷ்ணன் (ஆ.உ.எ.637) அவர்கள், நிர்வாகக் குழு உறுப்பினர்களாகத் திரு. வி. சுந்தரபாண்டி அவர்கள் (624), திருமதி வஸந்தா ராமஸ்வாமி, அவர்கள் (ஆ.உ.எ.408) திரு. ஆர். பொன்முருகன் அவர்கள் (ஆ.உ.எ.603), திரு. ஏ. மணிகண்டன் அவர்கள் (ஆ.உ.எ.833), திரு. எஸ். கோபால் (ஆ.உ.எ.621) அவர்கள் ஆகியோர் தேர்ந்தெடுக்கப்பட்டதைச் செயலாளர் அவையில் பதிவு செய்தார்.*

*அத்துடன் 27-8-23 அன்று நடைபெற்ற சிறப்புப் பொதுக்குழுக் கூட்டத்தின் வரைவுக் குறிப்பு, ஆண்டறிக்கையுடன் அனைத்து உறுப்பினர்களுக்கும் அனுப்பப்பட்டது எனவும் இந்த வரைவுக் குறிப்பு தொடர்பாக உறுப்பினர்கள் பின்னூட்டம் எதுவும் அளிக்கவில்லை எனவும் செயலாளர் தெரிவித்தார். உறுப்பினர்கள் ஒப்புதல் அளித்தால் இந்த வரைவுக் குறிப்புக்கு அவையால் ஏற்கப்படும் என்று அவர் கூறினார்.அவையினர்5 27-8-23 அன்று நடைபெற்ற சிறப்புப் பொதுக்குழுக் கூட்ட குறிப்புகளுக்கும் 27-8-23 அன்று தேர்தல் முடிவுக்கும் ஒப்புதல் வழங்கினார்கள்.*

***தீர்மானம் 4 (2021-23) 27-8-23 அன்று நடந்த சிறப்புப் பொதுக்குழுக் கூட்டத்தின் வரைவுக் குறிப்புக்கும் தேர்தல் முடிவுக்கும் ஒருமனதாக ஒப்புதல் வழங்கப்பட்டது. அந்த ஒப்புதலுக்கான தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.***

*முன்மொழிந்தவர்: திருமதி புஷ்பா மகாதேவன் (ஆ.உ.எ. 788)*

*வழி மொழிந்தவர்: திருமதி பிரசன்னா வெங்கடேஷ் (ஆ.உ.எ. 724)*

***குறிப்பு 7. 2022-23ஆம் ஆண்டுக்கான அறங்காவலர் குழு மற்றும் நிர்வாகக் குழுவின் ஆண்டறிக்கைளை வழங்குதல் மற்றும் ஒப்புதல் பெறுதல்.***

*அறங்காவலர் குழு மற்றும் நிர்வாகக் குழுவின் அறிக்கைகள் சங்கத்தின் ஆண்டறிக்கையுடன் உறுப்பினர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளது என்பதைச் செயலாளர் தெரிவித்தார். அவற்றை உறுப்பினர்கள் படித்திருப்பார்கள் என்று கருதுவதாக அவர் தெரிவித்தார். இவை குறித்து எந்தப் பின்னூட்டமும் இதுவரை வரவில்லை என்றும் அவர் தெரிவித்தார். எனவே பொதுக்குழு ஒப்புதல் அளித்தால் இந்த அறிக்கைகள் ஏற்கப்பட்டுத் தீர்மானம் எடுக்கலாம் என்று அவர் கூறினார்.*

*அத்துடன் சங்கத்தின் முந்தைய அறங்காவலர் குழு சில புரிந்துணர்வு ஒப்பந்தங்களைச் செய்துள்ளது என்றும் உறுப்பினர்களுக்கு அவர் தெரிவித்தார். அவையாவன:-*

*1. எஸ்.கே. மண்டல் 51,000 ரூபாய் நன்கொடை கொடுத்து அதற்கு ஆண்டுதோறும் ஒரு நாள் (குறிப்பாக ஆகஸ்டு 15ஆம் தேதி) சங்கத்தின் மினி அரங்கத்தை அவர்களது அமைப்பின் கூட்டத்தை நடத்த ஒப்பந்தம் செய்துள்ளது.*

*2. திரு. குமணராசன் அவர்களது லெமூரியா அறக்கட்டளை ஏற்கனவே கட்டட நிதிக்கு நன்கொடை கொடுத்திருந்தது. அதைத் தவிர தற்போது கூடுதலாக ஒரு லட்சம் ருபாய்க்கான புரிந்துணர்வு ஒப்பந்தமும் செய்துள்ளது என்று செயலாளர் தெரிவித்தார். அதன்படி பத்து ஆண்டுகளுக்கு ஆண்டுதோறும் ஒரு நாள் சங்கத்தின் இரண்டாம் தளத்தில் லெமூரியா அறக்கட்டளையின் நிகழ்ச்சி ஒன்றை அந்த அமைப்பு நடத்த உள்ளது என்று செயலாளர் தெரிவித்தார்.*

*3. இவற்றுடன் மதுரா டெகோரேட்டர் நிறுவனம் வட்டியில்லாத வைப்புத் தொகையாக ரூ.25 லட்சம் கொடுத்துள்ளது எனவும் அதற்கு ஈடாக மூன்று ஆண்டுகளுக்கு சங்கத்தின் அலங்கரிப்பு பணிக்கு ஏகபோக உரிமை மதுரா டெகோரேட்டருக்குக் கொடுக்கப்பட்டுள்ளது எனவும் தெரிவிக்கப்பட்டது. இரு தரப்பும் ஒரு வருடத்திற்கு இந்த ஒப்பந்தத்தை ரத்து செய்ய முடியாது எனவும் ஒரு வருடத்திற்குப் பிறகு மூன்று மாத முன்னறிவிப்புடன் இந்த ஒப்பந்தம் இரு தரப்பினராலும் ரத்து செய்யப்படலாம் எனவும் உறுப்பினர்களுக்குச் செயலாளர் தெரிவித்தார்.*

*4. அறங்காவலர் குழுப் பொருளாளராக இருந்த முனைவர் திரு. ஜே. கிருஷ்ணன் அவர்கள் ஒரு லட்ச ரூபாய் அறக்கட்டளை நிதியாகக் கொடுத்துள்ளதாகவும். அந்த தொகை 2025ஆம் ஆண்டுவரை கட்ட விரிவாக்கச் செலவுகளுக்குப் பயன்படுத்தப்படலாம் எனவும் பிறகு அது வைப்பு நிதியாக வைக்கப்பட்டு அதன் வட்டி பெண் குழந்தையின் கல்விக்காகக் கொடுக்கப்படவேண்டும் என்று முனைவர் திரு. ஜே. கிருஷ்ணன் அவர்கள் கூறியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது எனவும் உறுப்பினர்களுக்குச் செயலாளர் தெரிவித்தார்.*

*இதன் பிறகு, உறுப்பினர் திரு. பி. பாலசுப்ரமணியன் (ஆ.உ.எ.320) அவர்கள் சங்கத்திற்கு அன்றைய தேதியில் இருக்கும் மொத்தக் கடன்பாடு பற்றிய விவரத்தைத் தெரிவிக்குமாறு கேட்டார். செயலாளர் இந்த விவரம் குறிப்பு எண் 8 டுடன் தெரிவிக்கப்பட உள்ளதாகத் தெரிவித்தார்.*

*உறுப்பினர் திரு எஸ். சுந்தரராஜன் (ஆ.உ.எ.422) தனது ஆயுட்கால உறுப்பினர் எண் தொடர்ந்து தவறாக அச்சிடப்படுகிறது என்று தெரிவித்து திருத்தம் செய்யக் கோரினார். தவறுக்கு வருத்தம் தெரிவிக்கப்பட்டது.*

*இதன்பிறகு, அவை 2022-23ஆம் ஆண்டுக்கான அறங்காவலர் குழு மற்றும் நிர்வாகக் குழுவின் ஆண்டறிக்கைளை ஏற்று அவற்றுக்கு ஒப்புதல் வழங்கியது.*

***தீர்மானம் 5 (2022-23) 2022-23ஆம் ஆண்டுக்கான அறங்காவலர் குழு மற்றும் நிர்வாகக்குழுவின் ஆண்டறிக்கைகள் மற்றும் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் பொதுக்குழுவால் அங்கீகரிக்கப்பட்டு அந்த ஒப்புதலுக்கான தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.***

*முன்மொழிந்தவர் திரு.பி.பாலசுப்ரமணியன் ( ஆ.உ.எ.320)*

*வழிமொழிந்தவர் திரு முருகன் யாதவ் ( ஆ.உ.எ. 556)*

***குறிப்பு 8. 2022-23ஆம் ஆண்டுக்கான இருப்புநிலை அறிக்கை மற்றும் தணிக்கையாளர் அறிக்கைக்கான ஒப்புதல் பெறுதல்.***

*சங்கத்தின் 2022-23ஆம் ஆண்டுக்கான இருப்புநிலை அறிக்கை மற்றும் தணிக்கையாளர் அறிக்கை ஆண்டறிக்கையுடன் அனுப்பட்டிருப்பதாகவும் உறுப்பினர்களுக்கு அவை பற்றிய விளக்கம் எதுவும் தேவைப்படுகிறதா? என்று செயலாளர் பொதுக்குழுவுக்கு வந்திருந்த உறுப்பினர்களைக் கேட்டார். இதுபற்றிய விளக்கம் எதுவும் கோரப்படாததால், இவை தொடர்பாக சங்கத்திற்கு வந்திருந்த ஒரு கடிதத்தைப் படித்தார்.*

*உறுப்பினர் திரு. தாஸ் அவர்கள் (ஆ.உ.எ.611) அனுப்பியிருந்த அந்தக் கடிதத்தில், சங்கத்திற்கு இருக்கும் கடன் அதைத் தீர்ப்பதற்கான காலக்கெடு, நிதி திரட்டுவதற்கான திட்டங்கள், சங்கத்திற்கு 1-9-23 முதல் அன்றைய தினம் வரை வந்துள்ள வருமானம் போன்றவை குறித்துக் கேள்விகளை எழுப்பி இருந்தார். முந்தைய அறங்காவலர் குழுத் தலைவர் திரு. வி. ஆர். பி. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் (ஆ.உ.எ. 452) தங்கள் குழு பொறுப்பு ஒப்படைத்த தினத்தில் செய்யப்பட்டிருந்த புரிந்துணர்வு ஒப்பந்தகளில் தெரிவிக்கப்பட்டுள்ள ரூ 50,000 + ரூ 1,00,000 + ரூ 25,00,00 ஆகியவையும் அறக்கட்டளை நிதியான ரூ 1,00,000 சங்கத்திற்கு கடன் தொகைகளாக இருந்தாகவும், முந்தைய குழுவினர் கொடுத்திருந்த வட்டியில்லாக் கடன்கள், கட்டட ஒப்பந்ததாரர்களுக்குக் கொடுக்கவேண்டிய நிலுவைத்தொகைகள் ஆகிய அனைத்தும் தனது குழுவால் கொடுக்கப்பட்டு கணக்கு தீர்க்கப்பட்டு விட்டதாகவும் தெரிவித்தார். அத்துடன் மதுரா டெகரேட்டர் ஒப்பந்தத்தின்படி, அந்த டெகரேட்டர், 20 சங்க நிகழ்ச்சிகளுக்கு இலவசமாக அலங்கரிப்பு, மைக் வசதி , மற்றும் மேசை நாற்காலிகளைத் தருவார் எனவும் தெரிவித்தார். அத்துடன் ரூ. 3000 ராயல்டி தொகையையும் சங்கம் அந்த டெகரேட்டரிடமிருந்து பெறலாம் என்றும் தெரிவித்தார். அந்த ஒப்பந்தத்தில் பிரச்சினைகள் இருந்தால் அவற்றைப் பேசி முடிவு செய்யத் தானும் ஒத்துழைப்பு நல்குவதாகக் கூறினார்.*

*இதைத் தொடர்ந்து மதுரா டெகரேட்டர் நிறுவன ஒப்பந்தத்தால் சங்க வருமானம் பெருமளவு பாதிக்கப்படுவது, பற்றிய தகவல்கள் தெரிவிக்கப்பட்டன. இவற்றை அறங்காவலர் திரு. எம். முருகேசன், அவர்கள் (ஆ.உ.எ.744) நிர்வாகக் குழு உறுப்பினர் திரு.சுந்தர்பாண்டி அவர்கள் (ஆ.உ.எ. 624) ஆகியோர் அவைக்கு விளக்கினார்கள்.*

*1-9-23 முதல்அன்றைய தினம் வரையில் உள்ள கடன் விவரம் பற்றிய கேள்விக்கு, அறங்காவலர் குழுத் தலைவர் திரு. எஸ். ஏகாம்பரம் அவர்கள் பதில் அளித்தார். அவர் தற்போது லிப்ட் வசதி இன்றியமையாததாக இருப்பதால் அதை உடனடியாகப் பொருத்துவதற்கு சங்கத்தின் அறங்காவலர் குழு மற்றும் நிர்வாகக் குழுவினர் ஒன்பதரை லட்சம் ரூபாயை வட்டியில்லாக் கடனாகக் கொடுத்திருப்பதாகத் தெரிவித்தார். முந்தைய குழுவின் கடன் தொகைகளுடன் இந்த ஒன்பதரை லட்சம் ரூபாயையும் கணக்கில் எடுத்துக் கொண்டால் அதுவே சங்கத்தின் மொத்த கடனாகும் என்று தெரிவித்தார். அத்துடன், சங்க வருமானம் பெருமளவு பாதிக்கப்படுவதால் சங்கம் இந்த 25 லட்ச ரூபாயை விரைவில் திருப்பிக் கொடுக்க வேண்டும் எனவும் அதற்கு, உறுப்பினர்களிடமிருந்து நன்கொடை வசூலிப்பு மற்றும் வட்டியில்லாக் கடன் ஆகியவற்றைக் கோருவதாகவும் அறங்காவலர் குழுத் தலைவர் திரு.எஸ்.ஏகாம்பரம் அவர்கள் வேண்டுகோள் விடுத்தார். இவை கிடைக்காத பட்சத்தில் வங்கிக்கடன் வாங்குவது பற்றி யோசிக்க வேண்டி இருக்கும் என்று அவர் கருத்துத் தெரிவித்தார். திரு. வி.ஆர்.பி. கிருஷ்ணமுர்த்தி அவர்கள் சங்கம் கடன் வலையில் சிக்கிக் கொள்ளக் கூடாது. மாற்று வழிகளை யோசிக்க வேண்டும் என்று கருத்து தெரிவிதார். உறுப்பினர்கள் திரு பி.பால சுப்ரமணியன் (ஆ.உ.எ.320), திரு.கே.கணபதி (ஆ.உ.எ.144) திரு திருமலை நம்பி (ஆ.உ.எ.813),*

திரு ஏ. சிவசுப்ரமணியன் (ஆ.உ.எ. 248), திரு. சி. செல்வராஜ் (ஆ.உ.எ.459) திரு. சங்கரராஜ் நாடார், (ஆ.உ.எ.539) திரு. எஸ். வி. ராஜகோபால் (ஆ.உ.எ.551), நிர்வாகக் குழுப் பொருளாளர் திரு. ஆர். பெருமாள் (ஆ.உ.எ. 495) ஆகியோர் நிதி திரட்ட உறுப்பினர்களின் நன்கொடைகள் மற்றும் வட்டியில்லாக் கடன் வழிமுறைகளைக் கடைப்பிடிக்கப் பரிந்துரைத்தார்கள். அனைவரது கருத்தின்படி ஜூன் மாதம் வரை இந்த முயற்சிகளை முழுமுச்சுடன் செய்து நிதி திரட்டலாம் எனவும், அது நிறைவேறாத பட்சத்தில் மாற்று வழிகள் பற்றி யோசிக்கலாம் என்று தீர்மானிக்கப்பட்டது. அவைத்தலைவர் திரு. பி. கோதண்டராமன் அவர்கள் இந்த கடன் தொகையை விரைவில் திருப்பிக்கொடுக்க நன்கொடை, வட்டியில்லாக் கடன் ஆகியவற்றைத் திரட்ட முயற்சிப்பது நல்லதாக இருக்கும் என்று கருத்து தெரிவித்தார்.

பிறகு 2022-23ஆம் ஆண்டுக்கான இருப்புநிலை அறிக்கை மற்றும் தணிக்கையாளர் அறிக்கைக்கான ஒப்புதல் வழங்கப்பட்டது அந்த ஒப்புதலுக்கான தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**தீர்மானம் 6. (2022-23) 2022-23ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கை மற்றும் தணிக்கையாளர் அறிக்கைக்குப் பொதுக்குழு ஒப்புதல் வழங்கியது.**

முன்மொழிந்தவர் : திரு. வி. எஸ். ராஜகோபால் (ஆ.உ.எ. 551)

வழிமொழிந்தவர் : திரு.கே. கணபதி (ஆ.உ.எ. 144)

உணவு இடைவேளைக்குப் பிறகு கூட்டம் தொடர்ந்தபோது சங்கத்தின் ஆரம்பகால உறுப்பினர் திரு. சங்கரன் ரெட்டி அவர்கள் சங்கத்திற்கு அரசு அனுமதிகள் கிடைக்க ஒத்துழைப்பு நல்கிய திரு. சால்வி அவர்களைப் பாராட்டிப் பேசினார். திரு சால்வி அவர்களுக்கு நன்றி தெரிவிக்கப்பட்டு கௌரவிப்பு செய்யப்பட்டது.

**குறிப்பு 9. நிர்வாகக்குழு மற்றும் அறங்காவலர் குழுவின் 2024-25ஆண்டுகளுக்கான செயல்பாடுகளுக்கு நிதி ஒதுக்கீடு செய்தல்**

2023-24 ஆண்டுக்கான நிதி மொத்த ஒதுக்கீடு ரு. 15 லட்சம் என சென்றப் பொதுக்குழுக் கூட்டத்தில் செய்யப்பட்டு விட்டதாகச் செயலாளர் தெரிவித்தார். 2024-25ஆம் ஆண்டுக்கான நிதி ஒதுக்கீடு பற்றிய விவரங்களை நிர்வாகக்குழுப் பொருளாளர் திரு. ஆர். பெருமாள் (ஆ.உ.எ.495) அவர்கள் தெரிவித்தார். அவர் 2022-23ஆம் ஆண்டுக்கான மொத்த நிதி ஒதுக்கீடு 15 லட்சமாக இருந்தது எனவும் இந்த முறை 2024-25 ஆம் ஆண்டுக்கான நிதி ஒதுக்கீடு 18 லட்சம் வரை தேவைப்படும் என்று தோராயமாக மதிப்பீடு செய்யப்பட்டிருப்பதாகத் தெரிவித்தார். இதற்குப் பொதுக்குழுவின் ஒப்புதலை வேண்டினார். சிறிய கலந்துரையாடலுக்குப் பிறகு பொதுக்குழு 18 லட்சம் நிதி ஒதுக்கீட்டுக்கு ஒப்புதல் அளித்தது.

**தீர்மானம் 7. நிர்வாகக் குழு மற்றும் அறங்காவலர் குழுவின் 2024-25ஆண்டுகளுக்கான செயல்பாடுகளுக்கு பொதுக்குழு ரு 18 லட்சம் நிதி ஒதுக்கீடு வழங்கியது. அந்த ஒப்புதலுக்கான தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.**

முன்மொழிந்தவர் : திரு.வி.எஸ் ராஜகோபால் (ஆ.உ.எ. 551)

வழிமொழிந்தவர் : திரு.கே. கணபதி (ஆ.உ.எ. 144)

**10. சட்டபூர்வமான தணிக்கையாளரை அடுத்த பொதுக்குழுக் கூட்டம் வரையிலான கால அளவுக்கு நியமித்து அவரது தொழில்முறை ஊதியத்தை நிர்ணயித்தல்**

பி. சங்கர் அண்ட் கோ தணிக்கை நிறுவனம் கட்டட வேலையின் தொடக்கத்திலிருந்து சங்கத்தின் தணிக்கையாளராக இருந்து வந்துள்ளதாகவும் கட்டடம் தொடர்பான மூலதனமாக்குதல் போன்றவை நடைபெற உதவியாக வரும் நிதி ஆண்டுக்கும் சங்கர் அண்ட் கோ தணிக்கை நிறுவனத்தையே சட்டபூர்வமான தணிக்கையாளராக நியமிப்பது நலமாக இருக்கும் என்று நிர்வாகக்

குழு பரிந்துரை செய்திருப்பதாகவும் பொதுக்குழு ஒப்புதல் அளித்தால் சங்கத்தின் சட்ட பூர்வமான தணிக்கையாளராக இருப்பதற்கு சங்கர் அண்ட் கோ தணிக்கை நிறுவனம் இசைவு தெரிவித்துள்ளதாகவும் செயலாளர் தெரிவித்தார். அடுத்த பொதுக்குழுக் கூட்டம் வரை, பி. சங்கர் அண்ட் கோ தணிக்கை நிறுவனத்தை சங்கத்தின் சட்ட பூர்வமான தணிக்கையாளராக நியமிக்கலாம் எனவும் அவரது ஊதியத்தை நிர்வாகக் குழு தீர்மானிக்கலாம் எனவும் பொதுக்குழு ஒப்புதல் வழங்கியது.

***தீர்மானம் 8. அடுத்த பொதுக்குழுக் கூட்டம் வரை, பி.சங்கர் அண்ட் கோ தணிக்கை நிறுவனத்தை சங்கத்தின் சட்ட பூர்வமான தணிக்கையாளராக நியமிக்கவும் அவரது ஊதியத்தை நிர்வாகக்குழு தீர்மானிக்கலாம் எனவும் பொதுக்குழு ஒப்புதல் வழங்கியது அந்த ஒப்புதலுக்கான தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.***

*முன்மொழிந்தவர் : திரு. எஸ். ஜகன்னாதன் (ஆ.உ. 328)*

*வழிமொழிந்தவர் : திரு. ஆர். பாலகிருஷ்ணன் (ஆ.உ. 424)*

***குறிப்பு 11. உள்தணிக்கையாளரை அடுத்த பொதுக்குழுக் கூட்டம் வரையிலான கால அளவுக்கு நியமித்து அவரது மதிப்பூதியத்தை நிர்ணயித்தல்.***

*உள்தணிக்கையாளராக திரு வி.ஜெயராமன் என்ற ஒய்வுபெற்ற தணிக்கையாளரை ரூ.7,000 மதிப்பூதியத்தில் நியமிக்க நிர்வாகக் குழு பரிந்துரை செய்திருப்பதாகச் செயலாளர் தெரிவித்தார்.அறங்காவல்ர் குழுத் தலைவர் திரு.எஸ். ஏகாம்பரம் அவர்கள், சங்கத்திற்கு ஒரு தொழில்முறை உள்தணிக்கையாளரை நியமித்து அவருக்கு மதிப்பூதியம் கொடுப்பது சங்க நலனுக்கு உதவும் என்று கருத்து தெரிவித்தார். சிறிய கலந்துரையாடலுக்குப் பிறகு இந்தப் பரிந்துரை பொதுக்குழுவால் ஏற்கப்பட்டது.*

***தீர்மானம் 9:-அடுத்த பொதுக்குழுக் கூட்டம் வரை திரு.ஜெயராமன் அவர்களை சங்கத்தின் உள் தணிக்கையாளராக நியமித்து அவருக்கு ரூ.7000 மதிப்பூதியம் வழங்கப் பொதுக்குழு ஒப்புதல் அளித்த து. அந்த ஒப்புதலுக்கான தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.***

*முன்மொழிந்தவர் : திரு. வெங்கடேஷ் விஸ்வநாதன் (ஆ.உ.எ. 412)*

*வழிமொழிந்தவர் : திரு. திருமலை நம்பி கோனார் ( ஆ.உ.எ. 813)*

***12. தேர்தல் ஆணையர் அனுப்பியுள்ள பதவி விலகல் கடிதம் குறித்துப் பொதுக்குழுவுக்கு தெரிவித்து அவர் பதவி விலகலுக்குப் பொதுக்குழுவின் ஒப்புதல் பெறுதல்***

*சங்கத்தின் தேர்தல் ஆணையராக பதவி வகித்த திரு. எச் சுப்ரமணியன் (ஆ.உ.எ.581) அவர்கள் 27-8-23ஆம் தேதி தேர்தல் முடிவடைந்ததும் அக்டோபர் மாதம் தன்னுடைய பொறுப்பைத் தான் நிறைவேற்றி விட்டதாகவும் பல்வேறு அலுவல்கள் காரணமாகத் தன்னால் தேர்தல் ஆணையர் பொறுப்பைத் தொடர்ந்து வகிக்க இயலாது எனவும் சங்கத்திற்கு மின்னஞ்சல் மூலம் தெரிவித்திருந்தார் அவரது நியமனம் பொதுக்குழுவில் செய்யப்பட்டதால் அவரது பதவி விலகல் வேண்டுகோள் ஏற்பும் பொதுக்குழுவில் மட்டுமே செய்யப்படவேண்டும் என்பதை அவருக்குத் தெரிவித்தோம். என்று செயலாளர் தெரிவித்தார். அத்துடன் புதிய தேர்தல் ஆணையரைப் பொதுக்குழு தேர்ந்தெடுக்கும்வரை அவர் பதவியில் தொடர வேண்டுகோள் விடுத்தோம். தற்போது பொதுக்குழு கூடியிருப்பதால், திரு எச்.சுப்ரமணியன் அவர்களது சீரிய பங்களிப்புக்கு நன்றி தெரிவித்து அன்னாரது விருப்பப்படி அவரது பதவி விலகல் வேண்டுகோளைப் பொதுக்குழு ஏற்குமாறு பரிந்துரை செய்கிறோம். என்று செயலாளர் தெரிவித்தார். பொதுக்குழு தேர்தல் ஆணையர் திரு எச்.சுப்ரமணியன் அவர்களின் பதவி விலகல் கடிதத்தை ஏற்று அவர் பதவி விலக ஒப்புதல் அளித்தது.*

***தீர்மானம் 10. தேர்தல் ஆணையர் திரு.எச்.சுப்ரமணியன் (ஆ.உ.எ. 581) அவர்கள் அனுப்பிய பதவி விலகல் கடிதம் பொதுக்குழுவால் ஏற்கப்பட்டு அவர் பதவி விலகப் பொதுக்குழு ஒப்புதல் அளித்தது அந்த ஒப்புதலுக்கான தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.***

*முன்மொழிந்தவர் : திரு வெங்கடேஷ் விஸ்வநாதன் (ஆ.உ.எ. 412)*

*வழி மொழிந்தவர் : திரு.பாஸ்கர் பால்ராஜ் ( ஆ.உ.எ. 743)*

***குறிப்பு 13. நவிமும்பை தமிழ்ச் சங்கத்திற்கு 23-2-30 ஆண்டுவரையிலான கால கட்டத்திற்கு தேர்தல் ஆணையரை நியமித்தல்.***

*இரயில்வேயிலிருந்து சமீபத்தில் ஓய்வு பெற்றவரும் முதுகலைச் சட்டக்கல்வி கற்றவருமான திரு. ஆனந்தராஜ் பெரியசாமி அவர்ளை (ஆ.உ.எ. 749) 2023-30 காலகட்டத்திற்கான தேர்தல் ஆணையாளராக நிர்வாகக் குழு பரிந்துரைப்பதாகச் செயலாளர் தெரிவித்தார். இந்தப் பரிந்துரையைப் பொதுக்குழு ஒருமனதாக ஏற்றது.*

***தீர்மானம் 12 திரு. ஆனந்தராஜ் பெரியசாமி (ஆ.உ.எ.749) அவர்களைத் 23-2-30 ஆண்டுவரையிலான கால கட்டத்திற்கு தேர்தல் ஆணையர் பதவிக்காக. பொதுக்குழு ஒருமனதாகத் தேர்ந்தெடுத்தது. அந்த ஒப்புதலுக்கான தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.***

*முன்மொழிந்தவர் : திரு. ஆர். பாலகிருஷ்ணன் (ஆ.உ. 424)*
*வழிமொழிந்தவர் : திரு. எல். மணிவாசகம் (ஆ.உ.எ. 18)*

*இதனையடுத்து புதிய தேர்தல் ஆணையாளரன திரு. ஆனந்தராஜ் பெரியசாமி (ஆ.உ.எ. 749) அவர்களை ஓரிரு வார்த்தைகள் பேசுமாறு பொதுக்குழு வேண்டியது. திரு. ஆனந்தராஜ் அவர்கள் தான் இரயில்வேயில் பணி நிறைவு செய்துள்ளதாகவும், எல்.எல்.பி மற்றும் எல்.எல்.எம். சட்டக் கல்வி பயின்றுள்ளதாகவும் சங்க உறுப்பினர்களின் ஒத்துழைப்புடன், தான், சங்கத்திற்குத் தொண்டு புரிய விரும்புவதாகவும் தெரிவித்தார்.*

***குறிப்பு 14. சட்ட விதிமுறைகள் 34 (சி) 39 என்), 37- 146-1 147, 7, 15, ஆகியவற்றில் திருத்தங்களுக்கு பொதுக்குழுவின் ஒப்புதல் பெறுதல்.***

*நமது சங்கத்தின் சட்ட விதிமுறைகளில் அனைத்து உறுப்பினர்களின் உரிமைகளைப் பாதிக்கும் வண்ணமாக உள்ள சிலவற்றை சங்க நலன் கருதித் திருத்தம் செய்ய நிர்வாகக் குழு பரிந்துரை செய்துள்ளது எனவும் இவை ஆங்கிலம் மற்றும் தமிழில் அச்சிடப்பட்டு அனைத்து உறுப்பினர்களுக்கும் ஆண்டறிக்கையுடன் அனுப்பி வைக்கப் பட்டிருக்கிறது எனவும் செயலாளர் கூறினார்.*

*இந்த சட்ட திருத்தங்களைச் செய்ய சங்கத்தின் மூத்த உறுப்பினரும் சட்ட விதிமுறைகளில் ஆழ்ந்த அறிவுடையவருமான திரு. கே.எஸ்.சங்கரநரயணன்(ஆ.உ.386) அவர்களது வழிகாட்டுதலும் அறிவுரைகளும் மிகவும் உதவியாக இருந்ததாகக் கூறி திரு. திரு. கே.எஸ்.சங்கரநரயணன்(ஆ.உ.386) அவர்களுக்கு சங்கத்தின் சார்பில் நன்றி தெரிவித்தார்.*

*திரு. வி.ஆர்.பி. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் அவைத்தலைவரின் அனுமதியுடன் சில கருத்துக்களைத் தெரிவித்தார். அவர் சட்ட விதிமுறை திருத்தம் என்பது மிகவும் முக்கியமான ஒன்றாக இருப்பதால் அதை, ஆற அமர யோசித்து நிதானமாகச் செய்ய வேண்டும். அதற்காக ஒரு குழு அமைத்து அனைத்தையும் சீர்திருத்திப் பின்னர் அவற்றைப் புத்தகவடிவில் சுற்றறிக்கையாக உறுப்பினர்களுக்கு அனுப்பி வைத்து அதன்பிறகு அவை தொடர்பாகச் சிறப்புப் பொதுக்குழுக் கூட்டம் கூட்டி அந்த திருத்தங்களைச் செய்ய வேண்டும் என்று கருத்துத் தெரிவித்தார். அத்துடன் சங்கத்தின் பல அடிப்படை அம்சங்களான 'பெயர் மாற்றம்' போன்றவை செய்யப்பட வேண்டும் என்று கூறினார். இவை குறித்த திருத்தங்கள் இதற்கு முந்தைய சட்ட விதிமுறை திருத்தக் குழுவால் செய்யப்பட்டிருந்தன. ஆனால் அந்தத் திருத்தங்கள் பொதுக்குழுவால் ஏற்கப்படாததால் அவை கைவிடப்பட்டன என்று சொன்னார்.*

*திரு. பி. பாலசுப்ரமணியம் அவர்கள் (ஆ.உ.எ.320), முந்தைய சட்ட விதிமுறைத் திருத்தக் குழு தனது திருத்தங்கள் குறித்து உறுப்பினர்கள் சமர்ப்பித்திருந்த 49 பரிந்துரைகளை பொதுக்குழுவில் விவாதித்து முடிவெடுக்க மறுத்து வெளிநடப்பு செய்ததால்தான் அந்தத் திருத்தங்கள் கைவிடப்பட்டன என்று தெளிவுபடுத்தினார். அத்துடன், தற்போதைய திருத்தங்கள் மிகவும் பொதுவானவை. அவை தெளிவாக வழங்கப்பட்டுள்ளன எனவே அவை ஏற்கப்பட வேண்டும் என்ற தனது கருத்தைப் பதிவு செய்தார்.*

*இதன் பிறகு செயலாளர், திரு வி.ஆர்.பி. கிருஷ்மூர்த்தி அவர்கள் தெரிவித்ததுபோல நம் சங்க விதிமுறைகளில் பல திருத்தங்கள் செய்யப்படவேண்டும் என்பது சரியான கருத்தாகும். அதே நேரத்தில் நூற்றுக்கும் மேற்பட்ட சட்ட விதிமுறைகளை ஒரேயடியாகத் திருத்தி அவை அனைத்தையும் ஒரு பெரிய புத்தகமாக அச்சிட்டு அனைவருக்கும் அனுப்பும்போது உறுப்பினர்களுக்கு அவற்றை ஒரேடியாகப் படித்துப் புரிந்து கொண்டு அவை பற்றிய தங்கள் கருத்துக்களைத் தெரிவிப்பது மிகவும் கடினமாக இருக்கும். எனவே அனைத்து உறுப்பினர்களையும் பாதிக்கும் வகையில் உள்ள ஒரு சில முக்கியமான சட்டங்களை மட்டும் இப்போது திருத்தி, அந்தத் திருத்தங்களை, நவீனத் தகவல் தெரிவிப்பு முறைகள் மூலம் உறுப்பினர்களுக்குத் தெரிவித்து (அச்சிடுதல் கூரியர் செலவுகளைத் தவிர்த்து) பொதுக்குழு ஒப்புதலும் அறக்கட்டளை ஆணையர் அங்கீகாரமும் பெறுவதே தற்போதைய நிர்வாகக் குழு மற்றும் அறங்காவலர் குழுக்கள் கடைப்பிடிக்க விரும்பும் வழிமுறையாகும் என்று அவைக்குத் தெரிவித்தார்.* ***அத்துடன், சங்க விதிமுறை 146, 147 ஆகியவற்றில் உள்ள பெயர் மாற்றம் போன்ற முக்கியமான அம்சங்கள் எதையும் தற்போது திருத்தவில்லை எனவும் திருத்தங்களை உறுப்பினர்களுக்குத் தெரிவிக்கக் கடைப்பிடிக்க வேண்டிய <u>தகவல் தெரிவிப்பு முறையைப் பற்றி மட்டுமே</u> திருத்தம் கொண்டு வரப்பட்டுள்ளதாகவும் அவர் தெளிவுபடுத்தினார். <u>சுற்றுச்சூழல் பாதுகாப்பு கருதி அச்சிடுவதை அடியோடு தவிர்த்து, மின்னஞ்சல், வலைத்தளம் மற்றும் சங்கத்தின் வாட்ஸ் அப் குழுக்களின் மூலம் தகவல் தெரிவிக்கலாம் என்று மட்டுமே திருத்தம் கொண்டு வரப்படுகிறது என்பதைச்</u>*** *செயலாளர் உறுப்பினர்களுக்குத் தெளிவுபடுத்தினார். உறுப்பினர் திரு. வி. எஸ். ராஜகோபால் (ஆ.உ.எ.551) அவர்கள், சங்கத்தின் தபால்கள் தனக்குக் கிடைக்கவில்லை எனவும் வாட்ஸப் குழுத் தகவல்களும் தனக்குக் கிடைப்பதில்லை என்று தெரிவித்தார். அவர், தகவல்கள் அனைவரையும் சென்றடைய வழி வகுக்க வேண்டும் என்று கருத்துத் தெரிவித்தார். செயலாளர், தற்போது இருக்கும் வாட்ஸப் குழு பிராட்காஸ்டு குழுவாக இருப்பதால் சங்க எண்ணை சேமித்தவர்களுக்கு மட்டுமே தகவல் கிடைக்கிறது எனவும் தற்போது பொதுக்குழுவின் அனுமதியுடன் இந்த வாட்ஸப் குழு அட்மின் மட்டும் என்ற முறையில் மாற்றப்பட உள்ளது எனவும் தெரிவித்து அந்த மாற்றத்துக்கும் அங்கத்தினர்கள் ஒப்புதல் தெரிவிக்க வேண்டினார். நிர்வாகக்குழுப் பொருளாளர் திரு. ஆர்.பெருமாள் அவர்கள் (ஆ.உ.எ.495) பொதுக்குழு அறிக்கை கூரியர் மூலம் அனுப்பப்பட்டதில் 63 தபால்கள் திரும்பி வந்துள்ளதாகவும், தபால் கிடைக்காத உறுப்பினர்கள் அவற்றை இன்று சரி பார்த்துத் தங்கள் சரியான முகவரியை சங்க ஆவணங்களில் பதிவு செய்யுமாறு வேண்டினார். நிர்வாகக் குழுத் தலைவர் திருமதி ராஜஸ்ரீ அவர்கள் தேர்தல் நேரத்தில் உறுப்பினர்களை நேரில் சந்திக்கப் போனபோது பல உறுப்பினர்களின் சரியான முகவரி, மற்றும் கைபேசி எண்களைத் தங்கள் குழு குறித்துக் கொண்டு வந்து அவற்றைத் திருத்தியதாகவும் அதன் பிறகும் 63 தபால்கள் திருப்பி வந்துள்ளன என்று தெரிவித்தார். இதனையடுத்து, நிர்வாகக் குழு சிறப்பு அறிக்கை வாயிலாகத் தெரிவித்துள்ள ஏழு சட்டத் திருத்தங்களையும், அவை எதனால் திருத்தப்படவேண்டும் என்பதைச் செயலாளர் அவையினருக்குச் சுருக்கமாக விளக்கினார். பின்னர் அவைத்தலைவர் வழிகாட்டுதலின்படி ஒவ்வொரு திருத்தத்திற்கும் தனித்தனியாகப் பொதுக்குழுவின் ஒப்புதல் பெறப்பட்டு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. அவை பின் வருமாறு :*

*<u>1. விதி முறை 3 (n)</u>* **தகுதி வாய்ந்த உறுப்பினர்**:- *இருக்குமிடம் தெரியாத உறுப்பினர்கள், மூன்று பொதுக்குழுக் கூட்டங்களில் தொடர்ந்து பங்கெடுத்துக்கொள்ளாதவர்கள், சங்க நிகழ்வுகளில் பங்கேற்காதவர்கள் 'தகுதி வாய்ந்த உறுப்பினர்களாகக் கருதப்பட மாட்டார்கள், அவர்கள் எந்த ஒரு செயல்பாட்டுக்கும் கணக்கில் எடுத்துக் கொள்ளப்பட மாட்டார்கள் என்ற விதிமுறையில்* ***'தகுதி வாய்ந்த உறுப்பினர்' என்ற அம்சத்தை நீக்கப் பொதுக்குழு ஒப்புதல் வழங்கியது. அதற்கான தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.***

*தீர்மானம் 13 (2021-22) விதிமுறை 3 (n ) இல் உள்ள 'தகுதி வாய்ந்த உறுப்பினர் என்ற அம்சத்தை நீக்கப் பொதுக்குழு ஒப்புதல் அளித்துள்ளது. இதற்கான தீர்மானம் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.*

*முன்மொழிந்தவர்: திரு.கே.கணபதி (ஆ.உ.எ.144)*

*வழிமொழிந்தவர்: திரு. கெ.எம்.எல்.வராகன் (ஆ.உ.எ.106)*

*2 .விதிமுறை 34(©)*வாக்களிப்பு உரிமை தொடர்பான சட்டம்:- மூன்று பொதுக்குழுக் கூட்டங்களில் தொடர்ந்து பங்கெடுக்காத நபருக்கு தேர்தலில் பங்கேற்கவோ வாக்களிக்கவோ உரிமை இல்லை என்று தெரிவிக்கிறது. **இதை ரத்து செய்யப் பொதுக்குழு ஒப்புதல் அளித்தது.**

***தீர்மானம் 14 (2021-22) சட்ட விதிமுறை 34 (சி)யை ரத்து செய்ய பொதுக்குழு ஒருமனதாக ஒப்புதல்வழங்கியது. இதற்கான தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.***

*முன் மொழிந்தவர் : திரு. எம். ராஜகோபால் (ஆ.உ.எ.19)*

*வழிமொழிந்தவர் : திரு. ஆர். ஜெயராமன் (ஆ.உ.எ.131)*

*3* **.விதிமுறை 37-பதில் ஆள் வாக்களிப்பு** இது சங்கத்தின் அடிப்படைக் கொள்கைகள் பெயர் , போன்ற முக்கிய அம்சங்கள் திருத்தப்படும்போது, அதற்கான கூட்டங்களில் உறுப்பினர்கள் பதில் ஆள் மூலம் வாக்களிக்கலாம் என்று தெரிவிக்கிறது. **பதிலாள் வாக்கெடுப்பு ரத்து செய்யப்படுகிறது.**

***தீர்மானம் 15 (2021-22) சட்ட விதிமுறை 37இல் உள்ள பதிலாள் வாக்கெடுப்பை ஒட்டுமொத்தமாக ரத்து செய்யப் பொதுக்குழு ஒப்புதல் வழங்கியது. இதற்கான தீர்மானம் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.***

*முன்மொழிந்தவர் : திரு.பி.பாலசுப்ரமணியன் (அ.உ.எ. 320)*

*வழிமொழிந்தவர் : திரு. என். சுப்ரமணியன் (ஆ.உ.எ. 117)*

*4. விதிமுறை 146* சட்ட திருத்தங்களுக்கான முறைமை (1)- இது சங்கத்தின் அடிப்படைக் கொள்கைகள் பெயர், போன்ற முக்கிய அம்சங்கள் திருத்தப்படும்போது அவற்றுக்குக்கான வாக்கெடுப்பில் பதிலாள் மூலம் வாக்களிக்கலாம் எனவும் இவை அனவருக்கும் எழுத்துவாயிலாக/ அச்சிடப்பட்டு தெரிவிக்கப்பட வேண்டும் என்றும் குறிக்கிறது. **பதிலாள் வாகெடுப்பு ரத்து செய்யப் படுகிறது, சட்ட விதிமுறைத் திருத்தங்கள் தொடர்பான அறிக்கை மற்றும் தகவல்கள் மின்னஞ்சல், வலைத்தளம் மற்றும் வாட்ஸ் அப் குழுக்கள் மூலம் உறுப்பினர்களுக்குத் தெரிவிக்கப்படலாம் என்று திருத்தம் செய்ய பொதுக்குழு ஒப்புதல் வழங்கியது.**

***தீர்மானம் 16. (2021-22)விதிமுறை 146இல் தெரிவிக்கப்பட்டுள்ள பதிலாள் வாக்கெடுப்பை ஒட்டு மொத்தமாக ரத்து செய்யவும் சட்ட திருத்தம் பற்றிய அறிக்கைகள் அச்சிடப்படாமல், சுற்றுச்சூழல் மேம்பாட்டுக்கு உதவும் முறையில் நவீன தகவல் தெரிவிப்பு முறைகளான வலைத்தள அறிவிப்பு, மின்னஞ்சல் அனுப்புதல் மற்றும் சங்கத்தின் வாட்ஸப் குழுப் பதிவு ஆகியவற்றின் மூலம் தெரிவிக்கப்படவேண்டும் என்று ஒருமந்தாகத் தீர்மானிக்கப்பட்டது. இந்த் தீர்மானம் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.***

*முன்மொழிந்தவர் : திரு. ஏ. சிவசுப்ரமணியன்*

*வழிமொழிந்தவர் : திரு. கெ. எம். எல். வராகன் (ஆ.உ.எ.106)*

***5. சட்ட விதிமுறை 147 சட்ட திருத்தங்களுக்கான முறைமை** : இது நிர்வாகக்குழு அல்லது அறங்காவலர் குழுவின் பெரும்பான்மை உறுப்பினர்களால் முன்மொழியப்படும் திருத்தங்கள் எழுத்துவாயிலாக / அச்சிடப்பட்டு தெரிவிக்கப்பட வேண்டும் என்று தெரிவிக்கிறது.* **சட்ட**

விதிமுறைத் திருத்தங்கள் தொடர்பான கூட்டம் மற்றும் திருத்தங்கள் பற்றிய அறிக்கைகள் மின்னஞ்சல், வலைத்தளம் மற்றும் வாட்ஸ் அப் குழுக்கள் மூலம் உறுப்பினர்களுக்குத் தெரிவிக்கப்பட வேண்டும் என்று திருத்தம் செய்யப் பொதுக்குழு ஒப்புதல் வழங்கியது.

தீர்மானம் 17 (2021-22). நிர்வாகக்குழு அல்லது அறங்காவலர் குழுவின் பெரும்பான்மை உறுப்பினர்களால் முன்மொழியப்படும் திருத்தங்கள் பற்றிய அறிக்கைகள் மின்னஞ்சல், வலைத்தளம் மற்றும் வாட்ஸ் அப் குழுக்கள் மூலம் உறுப்பினர்களுக்குத் தெரிவிக்கப்பட வேண்டும் என்று திருத்தம் செய்யப் பொதுக்குழு ஒப்புதல் வழங்கியது.இசதற்கான தீர்மானம் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.

*முன்மொழிந்தவர் : திரு. எல். மணிவாசகம் (அ.உ.எ. 18)*

*வழிமொழிந்தவர்: திரு. பி. பாலசுப்ரமணியன் (ஆ.உ.எ. 320)*

<u>6. விதிமுறை 7</u> தகவல் தெரிவிப்பு :- உறுப்பினர்களுக்கு அறிக்கைகள் சான்றிதழ் அஞ்சல் மூலம் அல்லது நேரிலோ தெரிவிக்கப்பட வேண்டும் என்று குறிப்பி.டப்பட்டுள்ளது இதை நீக்கி மின்னஞ்சல், வலைத்தளம் மற்றும் வாட்ஸ் அப் குழுக்கள் மூலம் தகவல் தெரிவிப்பதை அனுமதிக்க சட்ட திருத்தம் செய்யப் பொதுக்குழு ஒப்புதல் வழங்கியது.

தீர்மானம் 18 (2021-22) உறுப்பினர்களுக்கு அறிக்கைகள் மின்னஞ்சல், வலைத்தளம் மற்றும் வாட்ஸ் அப் குழுக்கள் மூலம் தகவல் தெரிவிப்பதை அனுமதிக்க சட்ட திருத்தம் செய்யப் பொதுக்குழு ஒருமனதாக ஒப்புதல் வழங்கியது.

*முன்மொழிந்தவர் : திரு. கே. கணபதி (ஆ.உ.எ.144)*

*வழிமொழிந்தவர் : திரு. முருகன் யாதவ் (ஆ.உ.எ. 556)*

<u>7. விதிமுறை 15</u> சுருக்க குறிப்பு_ இதில், பொதுக்குழு கூட்டத்தின் செயல்பாடுகள் மற்றும் தீர்மானங்கள் தனித்தனியான பதிவுப் புத்தகங்களில் பதிவு செய்யப்படவேண்டும் என்று இருக்கிறது. பதிவுப் புத்தகங்களில் இடம்பெறும் பொதுக்குழுக் கூட்டத் தீர்மானங்கள் மின்னஞ்சல், வலைத்தளம் மற்றும் வாட்ஸ் அப் குழுக்கள் மூலம் உறுப்பினர்களுக்குத் தெரிவிக்கப்பட வேண்டும் என்ற திருத்தம் செய்யப் பொதுக்குழு ஒப்புதல் வழங்கியது.

தீர்மானம் 19 (2021-22) பதிவுப் புத்தகங்களில் இடம்பெறும் பொதுக்குழுக் கூட்டத் தீர்மானங்கள் மின்னஞ்சல், வலைத்தளம் மற்றும் வாட்ஸ் அப் குழுக்கள் மூலம் உறுப்பினர்களுக்குத் தெரிவிக்கப்பட வேண்டும் என்ற திருத்தம் செய்யப் பொதுக்குழு ஒப்புதல் வழங்கியது.இதற்கான தீர்மானம் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.

குறிப்பு எண் 15. அறக்கட்டளை ஆணையர் அலுவலகத்தில் பல ஆண்டுகளாக அரசுப் பதிவு செய்யப்படாமல் இருக்கும்;'சங்க குழுக்களில் மாற்றம்' பற்றிய பதிவுகளை சட்ட பூர்வமாகச் செய்து சீரமைக்கப் பொதுக்குழுவின் அனுமதி கோரி அதற்கான செலவு மதிப்பீட்டைத் தெரிவித்து அந்தச் செலவுக்குப் பொதுக்குழுவின் ஒப்புதல் பெறுதல்.

நடந்து முடிந்த தேர்தலில் தேர்ந்தடுக்கப்பட்ட புதிய குழுக்கள் பற்றிய விவரங்களை அறக்கட்டளை ஆணையர் அலுவலகத்தில் செயலாளர் முறையாகப் பதிவு செய்ய முயன்றபோது, தற்போது, அத்தகைய அதிகாரபூர்வமான அரசுப்பதிவு ஆன்லைன் பதிவாக மட்டுமே செய்யப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது எனவும், நமது சங்கத்தின் குழுக்கள் பற்றிய பதிவுகள் பத்தாண்டுக்கும் மேலாக அரசுப்பதிவு பெறாமல் இருக்கின்றன எனவும், செயலாளர், அவைக்குத் தெரிவித்தார். சங்கத்தின் குழுக்கள் மீது தொடுக்கப்பட்டுள்ள சில வழக்குகள் இன்னும் நிலுவையில் இருப்பதாகவும் அவற்றுக்குத் தீர்வு கிடைத்த பின்னர்தான் ஆன்லைன் அரசுப் பதிவு செய்ய முடியும் என்றும் தெரிவிக்கப்பட்டதாக அவர் தெரிவித்தார். . பிறகு வழக்கு தொடுத்தவர்கள் தங்கள் புகாரைத் திரும்பபெற்றுத் “தங்களுக்கு அரசுப் பதிவு செய்யப்படுவதில் எந்த ஆட்சேபமும் இல்லை” என்று

*சட்டபூர்வமாகத் தெரிவித்தால், அதன் பிறகு பதிவுகளை அதிகாரபூர்வமானதாகச் செய்ய முடியும் என்று வழக்கறிஞர் தெரிவித்ததாகச் செயலாளர் சொன்னார். அத்துடன் ஏறத்தாழ 8 புகார்கள் இருப்பதால் இவற்றை சரி செய்து பழைய குழுக்களுக்கு முறையான பதிவைப் பெற்று தற்போதைய குழுவைப் பதிவு செய்ய குறைந்த பட்சம் இரண்டரை லட்சம் ருபாய் செலவாகும் என்று வழக்கறிஞர் தெரிவித்ததாகவும். இது குறித்துப் பொதுக்குழு முடிவெடுத்து செலவுக்கு ஒப்புதல் வழங்க வேண்டும் எனச் செயலாளர் வேண்டுகோள் விடுத்தார்.*

*இது தொடர்பாக திரு வி.ஆர்.பி. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் சங்கப் பிரதிநிதிகள் ஆணையர் போன்ற உயர் அதிகாரிகளை நேரில் சந்தித்து விளக்கம் கொடுத்துப் பின் வழக்கறிஞர் மூலம் பதிவுகளைச் செய்யலாம் அதற்கு ஒன்று முதல் ஒன்றரை லட்சம் வரையில் தான் செலவு ஏற்படும் என்று கூறினார்.*

*திரு. சி. செல்வராஜ் அவர்கள் (ஆ.உ.எ.459), சங்கத்தின் மீது வழக்குத் தொடுத்துள்ளவர்களுடன் கலந்து பேசி, சுமுகமான முறையில் பிரச்சினைகளைத் தீர்த்துவிட்டால் சங்கத்திற்கு செலவே ஏற்படாது என்று யோசனை கூறினார். சில உறுப்பினர்கள் இந்த நடவடிக்கையைத் தள்ளிப்போட்டு நிதி நிலமை சரியானதும் மேற்கொள்லாம் என்று கருத்து தெரிவித்தார்கள்.*

*இது குறித்த சிறிய விவாதத்திற்குப் பிறகு, பிறகு அவைத்தலைவர் திரு பி. கோதண்டராமன் அவர்கள் **"இந்தஆன்லைன் பதிவு நடவடிக்கையை சட்டபூர்வமான ஆடிப்படைத் தேவையாகும் எனவே இதை ஒத்திப் போடக்கூடாது" என்று தெளிவுபடுத்தினார். அத்துடன் "முறையான அரசுப் பதிவு இல்லாத பட்சத்தில் சங்கத்தின் வங்கிக் கணக்குகள் அறக்கட்டளை ஆணையரால் முடக்கப்படக்கூடிய அபாயம் கூட இருக்கிறது" என்று தனது அனுபவத்தின் அடிப்படையில் எச்சரிக்கை செய்தார். எனவே ஆன்லைன்** பதிவுகளை பெறுவதற்கான செயல்பாடுகளை மேலும் ஒத்திப் போடாமல் அதற்கான நடவடிக்கைகளைத் தொடர்ந்து மேற்கொள்ளச் சொன்னார். இதற்கு ஆகக்கூடிய செலவைக் கூடுமானவரைக் குறைக்க முயற்சி செய்யுமாறு அவைத்தலைவர் நிர்வாகக்குழுவினருக்கு அறிவுரை கூறினார்.. அவைத்தலைவர் வழிகாட்டுதலை ஏற்று ஆன்லைன் அரசுப்பதிவு பெற ஆவன செய்யப் பொதுக்குழு ஒப்புதல் வழங்கித் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.*

*தீர்மானம் 20 (2021-22) அறக்கட்டளை ஆணையர் அலுவலத்தில் சங்கம் தொடர்பான பதிவுகளை ஆன்லைன் முறையில் பதிவு செய்து சட்டபூர்வமான பதிவுகளைப் பெறத் தேவையான செயல்பாடுகளை மேற்கொள்ள வேண்டும் எனவும் அதற்கான செலவைக் கூடிய வரையில் குறைக்க முயற்சிக்க வேண்டும் எனவும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.*

*முன்மொழிந்தவர் : திரு.சி.செல்வராஜ் (ஆ.உ.எ. 459)*

*வழி மொழிந்தவர் : திரு. டென்சிங்க் ஆரோக்யதாஸ் (ஆ.உ.எ. 595)*

***குறிப்பு எண் 16. சங்கத்தின் பொதுக்குழுக் கூட்ட வரைவுக் குறிப்புகள், அவற்றின் தீர்மானங்கள் சிறப்புப் பொதுக்குழுக் கூட்ட வரைவுக் குறிப்பு அதன் தீர்மானங்கள், பொதுக்குழு மற்றும் சிறப்புப்பொதுக்குழு அறிவிப்பு அறிக்கை, கூட்டத்தின் நிகழ்ச்சிக் குறிப்புகள் அவற்றின் தீர்மானங்கள்,சங்கத்தின் செய்தி மடல்கள் ஆகிய அனைத்தையும் அச்சிட்டுக் கூரியர் மூலம் அனுப்பாமல் சுற்றுச்சூழல் மேம்பாட்டுக்காகவும் ஆவணங்களுக்கு டிஜிடல் பதிவு ஏற்படுத்தவும் சங்க வலைத்தளம், மின்னஞ்சல் மற்றும் சங்கத்தின் வாட்ஸப் குழு மூலம் தெரிவித்தல் முறைமைக்குப் பொதுக்குழுவின் ஒப்புதல் பெறுதல்** :-*

*குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ள அனைத்துத் தகவல்களையும் உறுப்பினர்களுக்கு நவீன தகவல் தொடர்பு கருவிகளான வலைத்தளம், மின்னஞ்சல், மற்றும் வாட்ஸப் குழுவின் மூலம் தெரிவிக்க செயலாளர் பொதுக்குழுவின் ஒப்புதலைக் கோரினார். பொதுக்குழு இந்தக் கோரிக்கைக்கு ஒப்புதல் வழங்கியது.*

***தீர்மானம் 21(2021-22) சங்கத்தின் பொதுக்குழுக் கூட்ட வரைவுக் குறிப்புகள், அவற்றின் தீர்மானங்கள் சிறப்புப் பொதுக்குழுக் கூட்ட வரைவுக் குறிப்பு அதன் தீர்மானங்கள், பொதுக்குழு***

**மற்றும் சிறப்புப் பொதுக்குழு அறிவிப்பு அறிக்கை, கூட்டத்தின் நிகழ்ச்சிக் குறிப்புகள் அவற்றின் தீர்மானங்கள்,சங்கத்தின் செய்தி மடல்கள் ஆகிய அனைத்தையும் அச்சிட்டுக் கூரியர் மூலம் அனுப்பாமல் சுற்றுச்சூழல் மேம்பாட்டுக்காகவும் ஆவணங்களுக்கு டிஜிடல் பதிவு ஏற்படுத்தவும் சங்க வலைத்தளம், மின்னஞ்சல் மற்றும் சங்கத்தின் வாட்ஸப் குழு முலம் தெரிவித்தல் முறைமைக்குப் பொதுக்குழு ஒருமனதாக ஒப்புதல் வழங்கியது.**

*முன்மொழிந்தவர் : திரு.பாலகிருஷ்ணன் (ஆ.உ.எ. 424)*
*வழிமொழிந்தவர் : திரு. என். சுப்ரமணியன் (ஆ.உ.எ. 117)*

*17.* **ஏனைய பிற குறிப்புக்கள்:-**

*அ) திரு டென்சிங் ஆரோக்யதாஸ் (ஆ.உ.எ. 595)அவர்கள் ஆண்டுக்கொருமுறை வரும் பொங்கல் விருந்து நிகழ்ச்சியில் அனைவரும் மகிழ்ச்சியுடன் பங்கேற்பதால்,சங்கம் இந்த ஆண்டும் பொங்கல் விருந்தை நடத்த வேண்டும் என்ற வேண்டுகோளை முன்வைத்தார்.*

*அறங்காவலர் குழுத் தலைவர் திரு.எஸ்.ஏகாம்பரம் அவர்கள் சங்கத்திற்குக் கணிசமான கடன் இருக்கும்போது விருந்துக்குச் செலவழிக்க வேண்டாம் என்று நிர்வாகக் குழுவும் அறங்காவலர் குழுவும் கருதுவதாகவும் அத்துடன் நன்கொடை வசூலிப்பு இன்னும் முடிவடையாததால் உறுப்பினர்களை அணுக உள்ளததாகவும் அப்படி சங்கத்திற்குக் கடன் இருப்பதைச் சொல்லி நன்கொடை கேட்கும்போது, உறுப்பினர்கள் “இவ்வளவு கடன் இருக்கும்போது விருந்துக்கு எதற்குச் செலவழிக்கிறீர்கள்?” என்று கேட்க வாய்ப்பு இருக்கிறது எனவே 'இந்த ஆண்டு பொங்கல் விருந்துக்குக் காசு செலவழிக்க வேண்டாம்' என்ற தீர்மானத்தை மாதந்திரக் கூட்டத்தில் எடுத்துள்ளதாகவும் தெரிவித்தார்.*

*இதைத் தொடர்ந்து நடந்த பேச்சு வார்த்தையில் முன்னாள் அறங்காவலர் குழுத் தலைவர் வி.ஆர்.பி. கிருஷ்ணமூர்த்தி (ஆ.உ.எ.452) அவர்கள் உறுப்பினர்கள் திரு. வி.எஸ். ராஜகோபால் அவர்கள் (ஆ..உ. எ. 551), திரு.ஏ. சிவசுப்ரமணியன் அவர்கள் (ஆ.உ.248) , திரு.சங்கர் அவர்கள் ( ஆ.உ.எ. )திரு. சி. செல்வராஜ் அவர்கள் (ஆ.உ.எ.459) அறங்காவலர் திரு எம். முருகேசன் அவர்கள் (ஆ.உ.எ 744), நிர்வாகக்குழு உறுப்பினர்கள் திரு. ஏ. மணிகண்டன் அவர்கள் (ஆ.எ. 833), திரு.பொன்முருகன் அவர்கள் (ஆ.உ.எ.603), நிர்வாகக் குழுப் பொருளாளர் திரு. ஆர். பெருமாள் அவர்கள் (ஆ.உ.எ.495) ஆகியோர் பங்கேற்றார்கள்.*

*அவர்களில் அறங்காவலர் குழுத் தலைவர் வி.ஆர்.பி. கிருஷ்ணமூர்த்தி (ஆ.உ.எ.452) அவர்கள் உறுப்பினர்கள் திரு.வி. எஸ்.ராஜகோபால் அவர்கள் (அ.உ. எ. 551), திரு.ஏ. சிவசுப்ரமணியன் அவர்கள் (ஆ.உ.248) , திரு.சங்கர் அவர்கள் ( ஆ.உ..எ. )அறங்காவலர் திரு எம். முருகேசன் அவர்கள்,(ஆ.உ.எ 744) திரு.சி..செல்வவராஜ் ஆவர்கள் (ஆ.உ.எ. 459)ஆகியோர் மாற்றுக் கருத்துக்களை முன் வைத்தார்கள். .இவர்கள் 'விருந்தின் மூலம் சங்கத்திற்கு பல நன்கொடையாளர்கள் கிடைப்பார்கள்' என்று கருத்துத் தெரிவித்தார்கள். அத்துடன் சங்கத்திற்குச் செலவு வைக்காமல் தாங்களே நன்கொடை திரட்டி விழாவை நடத்தித் தருவதாகச் சொன்னார்கள்.இறுதியில் பொங்கல் விழாவுக்கான தேதி பிப்ரவர் 4 என்று தீர்மானிக்கப்பட்டு, விழாக் குழு ஒன்று அமைக்கப்பட்டது. அதில் உறுப்பினர்கள் திரு. டென்சிங்க் ஆரோக்யதாஸ் ( ஆ.உ.எ 595) .திரு.வி. எஸ்.ராஜகோபால் அவர்கள் (ஆ..உ.எ. 551), திரு.ஏ. சிவசுப்ரமணியன் (ஆ.உ.248) , திரு.சங்கர் ( ஆ.உ.எ. 895 )அறங்காவலர் திரு எம். முருகேசன், (ஆ.உ.எ.744) நிர்வாகக்குழு உறுப்பினர்கள் திரு.ஏ.மணிகண்டன் (ஆ.உ.எ.833), திரு.பொன்முருகன் (ஆஉ.எ.603) திரு. சிவசுப்ரமணியன் (சுரேஷ்) (ஆ.உ.எ 538) ஆகியவர்கள் உறுப்பினர்கலாக அறிவிக்கப்பட்டார்கள். அந்தக்குழு சங்கத்தின் பொன்விழாவுக்காக ஒன்றரை லட்சம் ரூபாயைக் காசோலை மூலம் நிதியாகத் திரட்டி அதைச் சங்கத்தின் வங்கிக் கணக்கில் ஜனவரி 25ஆம் தேதிக்குள் சேர்ப்பிக்க வேண்டும் எனவும், நிதி திரட்டியதும் அனைத்து ஏற்பாடுகளையும் சங்கத்தின் நிர்வாகக்குழுவின் வழிகாட்டுதலின்படி விழாக்குழு செய்ய வேண்டும் எனவும் தீர்மானிக்கப்பட்டது.*

*முன்மொழிந்தவர் : திரு.சி.செல்வராஜ் (ஆ.உ.எ.459)*
*வழிமொழிந்தவர்.: திரு. ஏ. சிவசுப்ரமணியன் (அ.உ.எ. 248)*

*ஆ. திரு.வி.ஆர்.பி. கிருஷ்ணமூர்த்தி அவர்கள், திரு. சங்கரன் ரெட்டி அவர்களின் வேண்டுகோளை அவை முன் வைத்தார். அவர் , திரு. சங்கரன் ரெட்டி அவர்கள் கட்டட வேலை*

நடக்கும்போதே தன்னிடம் நிறுவனர்களின் பெயர்ப் பட்டியலைக் கொடுத்து அந்தப் பெயர்களைப் பலகையில் எழுதி சங்கத்தில் வைக்க வேண்டும் என்று வேண்டுகோள் விடுத்தார் எனவும், சென்ற பொதுக்குழுக் கூட்டத்திலும் அவர் இந்த வேண்டுகோளைப் பதிவு செய்திருந்தார் எனவும் கூறினார்.. கட்டடத் திறப்பு விழாவுக்கு முன்பே அது வைக்கப்பட்டிருக்க வேண்டும் எனவும் அப்போது பொதுக்குழுவின் முறையான அனுமதியை வாங்கியிருக்காததால் அதை வைக்க முடியவில்லை என்றும் கூறினார். பின்னர் அவர் அந்தப் பட்டியலில் இருந்த நிறுவனர்களின் பெயர்களைப் படித்தார். . திரு.பி.எஸ்.பிள்ளை அவர்கள்,(006) திரு.ஆர்.சிவராமகிருஷ்ணன் அவர்கள் (ஆ.உ.எ.20), திருஎல். மணிவாசகம் அவர்கள்(ஆ.உ.எ 018)., திரு. எம்.ராஜகோபாலன் அவர்கள் (ஆ.உ.எ.019),திரு ஆர். சங்கரன் ரெட்டி அவர்கள் (ஆ.உ.135), திரு.எஸ்.பாலகிருஷ்ணன் அவர்கள் (ஆ.உ.எ. 005), திரு.எஸ்.கந்தசாமி அவர்கள்(ஆ.உ.எ.166), திரு. டி.கோபால் அவர்கள் (ஆ.உ.எ.17), திரு.பத்மநாபன் அவர்கள் (ஆ.உ.எ.016), திரு ஜி.டி.சால்வி அவர்கள் (ஆ.உ.எ. 154), திருஏ.ஜி. .ராம சுப்ரமணியன் (ஆ.உ.எ.079) அவர்கள், திருசி..கருப்பையா அவர்கள்(ஆ.உ.எ.151), திரு. என். மகாதேவன் அவர்கள் (ஆ.உ.எ.276),திரு. பி..ஐயப்பன் அவர்கள், திரு எல்.பி.வைத்தியநாதன் அவர்கள்,(ஆ.உ.எ. 170) திரு அழகிரி சாமி அவர்கள், திரு.ஏ.எஸ்.. வெங்கடாசலம் அவர்கள்(ஆ.உ.177), திரு.வி. நரசிம்மன் அவர்கள் (அ.உ.எ 044), திரு.ஜெ.ராகவன் (ஆ.உ.எ.031) அவர்கள் ஆகியோரது பெயர்களை அவர் பொதுக்குழுவுக்குப் படித்துத் தெரிவித்தார்.பின்னர், இது குறித்து விசாரித்துப் பெயர்ப் பலகையை வைக்குமாறு தற்போதைய அறங்காவலர் குழுத் தலைவர் திரு.எஸ். ஏகாம்பரம் அவர்களைடம் கூறிப் பட்டியலை ஒப்படைத்தார். . பின்னர் "பொதுக்குழுவின் அனுமதியுடன் ஒப்புதலுடன் இந்தப் பெயர்ப் பலகை வைக்கப்பட வேண்டும்" என்று கூறி நிறுவனர்களின் பெயர்ப் பட்டியலை சங்கத்தில் பலகையில் வைக்கப் பொதுக்குழுவின் அனுமதி கோரினார். பெயர்ப் பலகை வைக்கும் கோரிக்கை உறுப்பினர்களால் ஒருமனதாக ஏற்கப்பட்டது . இதைத் தொடர்ந்து, . திரு.வி.ஆர்.பி. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் சங்கத்தின் நிறுவனர்களுக்கு மரியாதை செலுத்தும் வகையில் பெயர்ப்பலகைக்கு ஆகக்கூடிய செலவை /சுமார் 10,000ரூபாயைத் தான் நன்கொடையாகத் தர விரும்புவதாகத் தெரிவித்தார்.இதற்கு அனைவரும் கர ஒலி எழுப்பி அவருக்குப் பாராட்டு தெரிவித்தார்கள் . அவைத் தலைவர் திரு.பி.கோதண்டராமன் அவர்கள், "அனைத்து அமைப்புகளிலும் நிறுவனர்களது பெயர்ப் பலகை வைக்கப்பட்டு கௌரவம் செலுத்தப்படுகிறது. நாமும் இதைப் பின்பற்றலாம்" என்று கருத்து தெரிவித்தார்.

திரு. சங்கரன் ரெட்டி அவர்கள் திரு.பி.எஸ். பிள்ளை அவர்கள் மற்றும் திரு.சிவராமகிருஷ்ணன் அவர்கள் ஆகிய இருவரது புகைப்படங்களையும் சங்கத்தில் வைக்க வேண்டும் என்று வலியுறுத்தினார். புகைப்படங்களை வைப்பதற்கு அவை அனுமதி அளிக்கவில்லை.

அவைத்தலைவர் அனுமதியுடன் உறுப்பினர் திரு.பி.பாலசுப்ரமணியன் அவர்கள் (ஆ.உ.எ. 320) சங்கத்தைப் புனரமைத்துக் கொடுத்த கட்டிட விரிவாக்கக் குழுவுக்கு தன்னுடைய மனமார்ந்த நன்றியைத் தெரிவித்தார். பல்வேறு தடங்கல்களுக்கிடையே பணியை வெற்றிகரமாகக் முடித்துக் காட்டிய விரிவாக்கக்குழுவினரின் செயல் திறனை மெச்சினார்.

இதனையடுத்து சங்கத்தின் துணைச்செயலாளர் திரு. எஸ். ராமையா (ஆ.உ.எ.736) அவர்கள் நன்றியுரை வழங்கினார். தனது நன்றியுரையில் அவர், சங்கத்தில் புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள தன்னைப் போன்ற உறுப்பினர்கள் சங்கத்திற்கு அர்ப்பணிப்புடன் சேவை செய்ய விரும்புவதாகவும் அதற்கு அனைத்து உறுப்பினர்களும் ஒத்துழைப்பு நல்க வேண்டும் என்று வேண்டினார். பின்னர் பொதுக்குழுக் கூட்டத்திற்குத் தலைமை தாங்கி நடத்திக் கொடுத்த திரு. பி. கோதண்டராமன் அவர்களுக்கும் முன்னாள் அறங்காவலர் குழுத்தலைவர் திரு. விஆர்.பி. கிருஷ்ணமூர்த்தி அவர்கள், தற்போதைய அறங்காவலர் குழுத் தலைவர் திரு. எஸ். ஏகாம்பரம் அவர்களுக்கும் அறங்காவலர் குழு நிர்வாகி திரு சிதம்பரதாணு அவர்களுக்கும் ,நிர்வாகக்குழுத் தலைவர் திருமதி ராஜஸ்ரீ நாகராஜன் அவர்களுக்கும் , செயலாளர் திருமதி மீனாட்சி வெங்கடேஷ் அவர்களுக்கும் மற்றும் பொதுக்குழுக் கூட்டத்திற்குத் திரளாக வந்திருந்து அனைத்துக் குறிப்புகளையும் சீரிய முறையில் நிறைவேற்ற உதவிய அனைத்து உறுப்பினர்களுக்கும் அறங்காவலர் குழு மற்றும் நிர்வாகக் குழுவின் சார்பில் மனமார்ந்த நன்றியைப் பதிவு செய்தார்.

நாட்டுப்பண்ணுடன் நவிமும்பை தமிழ்ச்சங்கத்தின் 46வது பொதுக்குழுக் கூட்டம் இனிதே நிறைவு பெற்றது.

46வது பொதுக்குழுக் கூட்டத்தில் அங்கீகரிக்கப்பட்ட ஆயுட்கால உறுப்பினர்கள்

| வ.எண் | ஆ.உ.எ. | பெயர் |
|---|---|---|
| 1. | 856 | திரு.ராம் நாடார் சந்திரன் |
| 2. | 857 | திரு சிவகுமார் நாடார் |
| 3. | 858 | திரு. முருகேஷ் சங்கர், |
| 4. | 859 | திரு.ஜனர்த்தன் ராஜரத்னம் நாடார் |
| 5. | 860 | திரு.விநாயக் நாடார் |
| 6. | 861 | திரு.ஜார்ஜ் ஸ்டீபன் |
| 7. | 862 | திருமதி.அனீதா கணபதி நாடார். |
| 8. | 863 | திரு.தனபால் ஆர். நாடார். |
| 9. | 864 | திரு.ராஜகோபல் சுண்டரலிங்கம் நாடார் |
| 10 | 865 | திரு.ஏ. ரமேஷ்குமார் |
| 11 | 866 | திரு.ஜெரோம் ஜெயசிங் |
| 12 | 867 | திரு.ராதாகிருஷ்ணன் செல்வம் |
| 13 | 868 | திரு.ஆர். சிவகுமார் |
| 14 | 869 | பி.ஜெயதீப் |
| 15 | 870 | திருமதி பூமா சுந்தரராஜன் |
| 16 | 871 | திரு.ஏ.பன்னீர்செல்வம் |
| 17 | 872 | திரு. மணிகண்டன் கோனார் |
| 18 | 873 | திரு.பாலசுப்ரமனி யாதவ் |
| 19 | 874 | திருமதி வெள்ளாம்மா சுப்பையாகோனார் |
| 20 | 875 | திரு.அயிரதாஸ் |
| 21 | 876 | திரு. முத்துகிருஷ்ணன்வேலு யாதவ் |
| 22 | 877 | திரு.ஐயப்பன் தில்லை யாதவ் |
| 23 | 878 | திரு.சுடலை இசக்கி சுதன் |
| 24 | 879 | திரு. நம்பிராஜன் |
| 25 | 880 | திரு.எஸ்.இசக்கி முத்து |
| 26 | 881 | திரு.ஆறுமௌகம் திருமலை நம்பி யாதவ் |
| 27 | 882 | திரு.எஸ். சுடலை முத்து கோனார் |
| .28 | 883 | திரு.கணேஷ் ஆனையப்பன் முதலியார் |
| 29 | 884 | திரு.முத்து சேகர பாண்டியன் |
| 30 | 885 | திரு.நம்பி ஏ. யாதவ் |
| 31 | 886 | திரு..அண்ணாமலை பாலசுந்தரம் |
| 32 | 887 | திரு.ராஜேஷ் வெங்கடேஸ்வரன் ஐயர் |
| 33 | 888 | திரு.சாலமன் நாடார். |
| 34 | 889 | திருமதி கோமு மணிகண்டன் பிள்ளை |
| 35 | 890 | திரு.நம்பி தாஸ் |
| 36 | 891 | திரு.சந்திர நாயகம் பிள்ளை |
| 37 | 892 | திரு.லட்சுமணன் சுப்பையா |
| 38 | 893 | திரு.எம். சிவசங்கர் |
| 39 | 894 | திருமதி கோமதி ராஜ் |
| 40 | 895 | திரு.ஏ.சங்கரன் பிள்ளை |
| 41 | 896 | திரு.எஸ்.சண்முக சுந்தரம். |
| 42 | 897 | திரு.சுரேஷ் மாசானம் கோனார். |
| 43 | 898 | திருமதி கனகவல்லி சங்கரநாராயணன் |

(ஒப்பம்)
ராஜஸ்ரீ நாகராஜன்
தலைவர்

(ஒப்பம்)
மீனாட்சி வெங்கடேஷ்
செயலாளர்